20.01.2026

அ.வ.எண். 105/2020

**வா.சா.2 – ராமலிங்கம், த/பெ.சுப்பண்ண கவுண்டர்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 20.01.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் Diploma படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். வாதி பாலசுப்பிரமணியம் சொன்னதை வைத்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை, எனக்கு தெரிந்ததை சொல்லியுள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றும், வாதி பாலசுப்பிரமணியம் கேட்டு கொண்டதன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணத்தில் என்னுடைய பெயர் உள்ளதா என்றால் இல்லை. என் தகப்பனார் பெயர் உள்ளது.

2. என்னுடைய மனைவி பெயர் தீபா. சுப்பாத்தாள் என்பவர் என்னுடைய சின்னம்மா ஆவார். ராமசாமி என்னுடைய சித்தப்பா, சாரதாமணி தேவி என்னுடைய அக்கா ஆவார். பிரதிவாதி பெயரில் எப்போது பத்திரம் ஏற்பட்டது என்றால் 2002 ல் வாங்கியுள்ளார். யாரிடம் சொத்து வாங்கினார் என்றும், அதன் எல்லை விவரம் தெரியுமா என்றால் சோளக்காட்டு பாளையத்தை சேர்ந்த தாசன் என்பவரிடம் இருந்து ஏக்கர் 2¾ வாங்கியதாக சொன்னார்கள். நான் வண்டிப்பாதையின், உரிமையாளர் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அப்பா பெயரில் ஆவணம் உள்ளது, என் அப்பா இறந்ததால், வாதி பாலசுப்பிரமணியம் என்னிடம் கேட்டார், நான் அனுமதி வழங்கினேன்.

3. என் தகப்பனார் பெயரில் இருந்த சொத்துக்களை நாங்கள் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். பிரதிவாதி சொத்தின் நான்கு எல்லை என்ன என்றால் தென்கிழக்கு எல்லையாக எனது பூமியும், வடகிழக்கில் எனது நிலம் உள்ளது, வடமேற்கில் வாதி பாலசுப்பிரமணியம் மற்றும் சக்திவேல் நிலம் உள்ளது,

தென்மேற்கில் தடம் உள்ளது. வாதிக்கு தடம் உள்ளது என்பதற்கான ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். யாரிடம் இருந்து எப்போது ஆவணம் வாங்கப்பட்டது என்றால் சரியாக தெரியவில்லை. என்னுடைய பூமியும், வாதி மற்றும் பிரதிவாதியின் பூமியையும் சர்வேயர் பலமுறை அளந்துள்ளார் என்றால் என்னுடைய பூமியை நான் இருமுறை அளந்துள்ளேன். வாதி, பிரதிவாதிகளின் பூமியை அளந்தார்களா என்று எனக்கு தெரியாது.

4. நீதிமன்றம் மூலமாக சொத்தை அளக்க வாதி, என்னை அழைத்தாரா என்றால் இல்லை. நான் வாகராயம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேனா என்றால் இல்லை, நான் மோப்பிரிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ளது தான் என்னுடைய மனைவி பெயரில் உள்ள வீடு என்றால் சரிதான். நான், சுமார் 10-15 ஆண்டுகளாக, ஈரோட்டில் குடியிருந்து, துணி வியாபாரம் செய்து வந்தேன் என்றால் தற்போதும் வியாபாரம் செய்து வருகிறேன். 2014 ம் ஆண்டு வரை ஈரோடு போய் வந்து கொண்டிருந்தேன், தற்போது பி.சா.ஆ.1 புகைப்படத்தில் கண்ட வீட்டில் குடியிருக்கவில்லை. மோப்பிரிபாளையத்தில் குடியிருக்கிறேன்.

5. வாதி பாலசுப்பிரமணியம், எனது உறவினர் என்றால் இல்லை. ஒரே ஊர்க்காரர் ஆவார். பிரதிவாதியின் தென்புற மூலையில் வேப்பமரம் இருந்தது என்றும், அதை அகற்ற வேண்டி நான், பிரதிவாதியை அணுகினேனா என்றால் இல்லை. அந்த இடத்தில் வேப்பமரம் உள்ளதா என்றால் உள்ளது. பி.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள தடத்தில் உள்ள முட்செடிகளை அகற்ற சொல்லி நான் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்தேன் என்றால் இல்லை. நான், வாதி பாலசுப்பிரமணியத்துடன் சேர்ந்து பிரச்சனை செய்தேன் என்றும், அதற்கு பிரதிவாதி மறுத்த காரணத்தினால் நீதிமன்றத்திற்கு பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. பி.சா.ஆ.1 புகைப்படத்தில் கண்ட தடத்தின் வழியாக வாதி பாலசுப்பிரமணியம் வீட்டிற்கு செல்ல முடியும் என்றால் சரிதான். அது சுமார் 30 அடி தடம் ஆகும். 31.03.2023 அன்று புகைப்படத்தில் கண்ட வீட்டை என் மனைவிக்கு நான் எழுதி

கொடுத்தேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள கல்லுக்கால் போட்ட இடத்தையும் நான் விற்றுவிட்டேன். பி.சா.ஆ.1 புகைப்படத்தில், தடத்தில் இருந்து கல்லுக்கால் வரை எனக்கு பூமி இல்லை என்றால் சரிதான், எனது மனைவி பெயரில் உள்ளது. பி.சா.ஆ.1 புகைப்படத்தில், வாதி, பாலசுப்பிரமணியம் கிழக்கு பார்த்தவாறு வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அவர் வீடு கட்டுவதற்கான அனைத்து வேலைகளையும் இந்த தடத்தின் வழியாக சென்று செய்தார் என்றால் சரிதான். என்னிடம் அனுமதி கேட்டு செய்தார்.

7. மேற்படி புகைப்படத்தில் வாதி வீட்டிற்கு செல்லும் தடத்தின் அகலம் சுமார் 30 அடி என்றால் சரிதான். தடத்தின் அடி நில உரிமையை நான் வைத்துள்ளேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வருவாய் ஆவணங்களில், இவ்வழக்கின் வாதி, பிரதிவாதியின் இடத்தில் போய் வாதி, அவரது பூமியை அடைவது போல் வருவாய் ஆவணங்களில் இல்லை என்றால் முன்பு 2000-2001 ஆண்டில் இருந்தது, பின்னிட்டு உட்பிரிவு சேர்த்து செய்ததால் அவ்வாறு இல்லை. TOPO வரைபடத்தில், தற்போது பிரதிவாதியின் நிலத்தில் அடைவது போல் ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் TOPO வரைபடத்தை எடுத்து பார்க்கலாம். புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள வண்டித்தடமானது சுமார் 8 ஏக்கர் பரப்பளவு கொண்ட பூமியை அடைகிறது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur